29.04.2015

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கொடைக்கானலில் கோடை மழை: சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி**

கொடைக்கானலில் கோடை மழை பெய்ததால், சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியடைந்தனர்.கொடைக்கானலில் ஏப்ரல், மே மாதங்களில் சீசன் காலம். இந்த காலங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்ந்து இருக்கும்.பொதுவாக, சீசன் காலங்களில் அவ்வப்போது சாரல் மழை, மிதமான வெயில், மேகமூட்டம் என நிலவும். ஆனால், இந்தாண்டு ஏப்ரல் மாதத்தில் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இதனால், தொடர்ந்து குளுமையான சீதோஷ்ண நிலை நிலவி வருகிறது.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை காலை முதல் மிதமான வெயில் நிலவியது. மாலையில் ஒரு மணி நேரம் நல்ல மழை பெய்தது.

இந்த மழையால் நீர்வரத்துப் பகுதிகளான வெள்ளி நீர்வீழ்ச்சி, பியர்சோழா அருவி, பேரிபால்ஸ் அருவி உள்ளிட்டவற்றில் தண்ணீர் வரத்துத் தொடங்கியுள்ளது. இதனால், இந்தாண்டு குடிநீருக்குப் பிரச்னை இருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மழையில் நனைந்தவாறே, சுற்றுலா இடங்களை பயணிகள் ரசித்து வந்தனர்.

**சில இடங்களில் இன்று மழை**

தமிழகம், புதுவையின் சில இடங்களில் புதன்கிழமை மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.லட்சத் தீவுகளுக்கு அருகில் ஏற்பட்டுள்ள வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சியின் காரணமாக தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்து வருகிறது. இந்தச் சுழற்சி தொடர்வதால் புதன்கிழமையும் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர். செவ்வாய்க்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் வால்பாறையில் 50 மி.மீ. மழை பெய்துள்ளது. தொண்டி, பேச்சிப்பாறை,

சின்னக் கல்லாறு, பெரம்பலூர், பஞ்சப்பட்டி, சாத்தான்குளம் (30 மி.மீ.), ராஜபாளையம், காரைக்குடி, திருப்பத்தூர், தொழுதூர், பெரியாறு, முசிறி, நிலக்கோட்டை (20 மி.மீ.), கழுகுமலை, சிவகங்கை, பாபநாசம், அருப்புக்கோட்டை, மணிமுத்தாறு, கோவில்பட்டி, ஒரத்தநாடு, சீர்காழி (10 மி.மீ.) ஆகிய பகுதிகளிலும் மழை பெய்துள்ளது.

**பனை ஓலை விசிறிக்கும் மவுசு!**



காஞ்சிபுரத்தில் கோடை வெயில் கொளுத்தி வருகிறது. அனல் காற்று வீசுகிறது. அதனால் மின்விசிறி, குளிர்சாதனப் பெட்டி உள்பட மின்னணுப் பொருள்களின் விற்பனை அதிகரித்து வருகிறது. அதேவேளையில் இயற்கையின் கொடையான, பனை ஓலை விசிறிகளையும் பொதுமக்கள் அதிக ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.காஞ்சிபுரத்தில் காந்தி சாலை, ரயில்வே சாலை, பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் சாலையோரங்களில் பனை ஓலை விசிறிகள் அதிக அளவில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து பனை ஓலை விசிறி வியாபாரிகள் கூறியது:

காஞ்சிபுரத்துக்கு வேலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து பனை ஓலை விசிறிகளை வாங்கி வருகிறோம்.

இதைத் தயாரிப்பவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டது. பனை ஓலை விசிறிகள் முன்பெல்லாம் கோடைத் தொடங்குவதற்கு முன்பே அதிக அளவில் வந்து குவிந்துவிடும்.இப்போது அதுபோன்ற சூழ்நிலை இல்லை. கடந்த ஆண்டுகளில் மின்வெட்டு அதிகம் நிலவியதால் எங்களது வியாபாரம் அமோகமாக இருந்தது. நிகழாண்டு மின்வெட்டு குறைந்துள்ளதால் வியாபாரம் குறைந்திருக்கிறது.

குழந்தைகள் பிறந்துள்ள வீடுகளில் ஓலை விசிறிகளை விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.ஒரு விசிறியை ரூ.15-க்கும், 2 விசிறியை ரூ. 25-க்கும் விற்பனைச் செய்கிறோம். இதனால், ஒரு விசிறி வாங்குபவர்கள்கூட 2 விசிறி வாங்க ஆர்வம் காட்டுகின்றனர் என்றனர்.

**"விற்பனை நிலையங்கள் விவசாயிகளுக்குத் தரமான விதைகளை விற்க வேண்டும்'**

தனியார் விதை விற்பனையாளர்கள் விவசாயிகளுக்குத் தரமான விதைகளை விற்பனைச் செய்ய வேண்டும் என்று, காஞ்சிபுரம் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சீத்தாராமன் அறிவுறுத்தினார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள தனியார் விதை விற்பனையாளர்களுக்கு விதை நலம் பேணும் பயிற்சி செவ்வாய்க்கிழமை வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

விதை ஆய்வு துணை இயக்குநர் முன்னிலை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் சீத்தாராமன் தலைமை வகித்து பேசியது: வேளாண் தொழிலை வென்றெடுக்க தரமான விதைகள் அவசியம். எனவே அனைத்து விற்பனை நிலையங்களிலும் தரமான விதைகளையே விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும். விதைகள் சட்ட அமலாக்கப் பிரிவினர் இந்த விஷயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றார் அவர்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பொன். சந்திரன் பேசியது:விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விதைகளின் தரம் குறித்து விவசாயிகள் குறைச் சொல்லாதவாறு விதையின் தரத்தை தனியார் விற்பனை நிலையங்கள் உறுதி செய்ய வேண்டும் என்றார்.

வேளாண் உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) வாசுதேவன் பேசியது: விதை விற்பனை நிலையங்களில் விதைகளை உரம், பூச்சி மருந்துகளுக்கு அருகே அடுக்கக் கூடாது. அவ்வாறு அடுக்குவதன் மூலம் விதைகளின் தரம் குறைந்து விடும் என்றார்.முகாமில் விதை சான்று உதவி இயக்குநர் அபுபக்கர், விதை பரிசோதனை அலுவலர் பெருமாள், விதை ஆய்வாளர்கள் ரவி, தேசிய விநாயகம், ராமு உள்பட பலர் பங்கேற்று பேசினர்.

**விவசாயிகளுக்கு பசுந்தாள் எரு விதை வழங்கும் விழா**

உத்தரமேரூர் ஒன்றிய விவசாயிகளுக்கு பசுந்தாள் எரு விதை வழங்கும் விழா திங்கள்கிழமை நடைபெற்றது.விழாவுக்கு காஞ்சிபுரம் மாவட்ட இயற்கை வேளாண்மை விழிப்புணர்வுச் சங்கத் தலைவர் சோழனூர் மா.ஏழுமலை தலைமை வகித்தார்.செயற்குழு உறுப்பினர்கள் மு.பரசுராமன், மாயகிருஷ்ணன், ஆர்.வரதன், சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.காஞ்சிபுரம் மாவட்ட வேளாண் வணிக, விற்பனைத் துறை துணை இயக்குநர் ஆ.சந்துரு கலந்துகொண்டு உத்தரமேரூர் ஒன்றியத்தில் 53 விவசாயிகளுக்குத் தனது சொந்தச் செலவில் பசுந்தாள் எரு விதையினை வழங்கிப் பேசினார்.நிகழ்ச்சியில், வேளாண்மை உதவி அலுவலக மு.ஆறுமுகம், துணை வேளாண் அலுவலர் ஆனந்தராஜ், வேளாண் உதவி அலுவலர் ராஜேந்திரன், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு மண்வள அட்டை**

வத்தலகுண்டு வேளாண் துறை சார்பாக செவ்வாய்கிழமை அனைத்து கிராம விவசாயிகளுக்கும் தேசிய அளவில் மண் வளஅட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, அதன் தொடக்கமாக மண்மாதிரிகள் எடுக்கப்படவுள்ளன.மண்அட்டையின் அடிப்படையில் தான் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளதால் விவசாயிகள் வயலுக்கு வந்து மண்ணை சேகரிப்பதற்கு உதவிட வேண்டும், மேலும், செல்லிடப்பேசி எண், ஆதார் எண், சர்வே எண் உள்பட அனைத்து விவரங்களையும் அளித்து ஒத்துழைக்க வேண்டும் என வத்தலகுண்டு வேளாண்மை உதவி இயக்குநர் அ.கோபால்ராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

**மலர்க் கண்காட்சிக்கு தயாராகி வரும் கொடைக்கானல் பிரையண்ட் பூங்கா**

கொடைக்கானல் மலர்க் கண்காட்சிக்காக பிரையண்ட் பூங்காவில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. மலர்த் தோட்டப் போட்டிகளில் பங்கு பெறுவதற்கு விவசாயிகள் ஆர்வமுடன் உள்ளனர்.

கொடைக்கானலில் 54-ஆவது மலர்க் கண்காட்சி மே மாதம் 3-ஆவது வாரத்தில் நடைபெற உள்ளது. இதற்காக பூங்காவில் ஒரு லட்சம் பூக்கள் பூத்துக் குலுங்கியுள்ளன .மேலும், சிறுவர்களை மகிழ்விக்கும் விளையாட்டுப் பூங்கா, சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் இசை நடன நீருற்று, இரவு நேரங்களில் மின் அலங்கார விளக்குகள், கண்ணாடி மாளிகையில் நூற்றுக்கும் மேற்பட்ட காக்டஸ் வகையான 7அடி முதல் 50-அடி உயரமுள்ள கற்றாளைச் செடிகள், பச்சை நிற ரோஜாக்கள் ஆகியவை பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்து வருகிறது.

இவைத் தவிர, அஸ்டோமெரிஸ், பிங்க், ஆஸ்டர், சால்வியா, மேரி கோல்ட், ஆல்வின், டேலியாஸ், சிமியாஸ், ஆந்தோரியம் உள்ளிட்ட 60-வகையான மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. இவற்றை சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியுடன் பார்த்து ரசித்து வருகின்றனர்.

இது குறித்து தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் மு.பாண்டி செவ்வாய்க்கிழமை மாலை கூறியதாவது: மலர்க் கண்காட்சிக்காக பிரையண்ட் பூங்காவில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது.

மலர்க் கண்காட்சியில் மலர்த் தோட்டங்கள் அமைத்தல், காய்கறிகள், பழவகைகள், ஆகியவை அமைத்தல், கொடைக்கானல் பகுதிகளில் உள்ள பங்ளாக்களில் மலர்பாத்திகள் அமைப்பது உள்ளிட்ட போட்டிகளில் பங்கு பெறுவதற்கு கொடைக்கானல், மன்னவனூர், கிளாவரை, குண்டுபட்டி, பூம்பாறை ஆகியப் பகுதிகளிலிருந்து பொது மக்கள் தங்களது பெயர்களை பதிவு செய்து வருகின்றனர். பூங்காவை சுற்றிப் பார்க்கும் பயணிகள் வசதிக்காக காலை 9மணி முதல் இரவு 7மணி வரை பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர் புல்தரைகள் சீரமைக்கப்பட்டும், 100-க்கும் மேற்பட்ட பூந்தொட்டிகளில் பல்வேறு வகையான மலர்கள் வளர்க்கப்பட்டு பார்வையாளர்களை கவரும் வகையில் அமைந்துள்ளது என்றார்.

**மரவள்ளி கிழங்கு விளைச்சல் அதிகரிப்பு**

போடி அருகே மரவள்ளிக் கிழங்கு விளைச்சல் அதிகரித்தும், விலை வீழ்ச்சி காரணமாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

தேனி மாவட்டம், போடியை அடுத்த தேவாரம் பகுதியில் மரவள்ளிக் கிழங்கு அதிக அளவில் பயிர் செய்யப்படுகிறது. இக் கிழங்கு, தேவாரம், தம்மிநாயக்கன்பட்டி, தே.ரெங்கநாதபுரம், தே.மீனாட்சிபுரம், ராமகிருஷ்ணாபுரம், பொட்டிப்புரம், மறவபட்டி உள்ளிட்ட கிராமங்களில் சுமார் ஆயிரம் ஏக்கரில் விளைவிக்கப்படுகிறது.அருகிலுள்ள கேரள மாநில மக்களின் முக்கிய உணவாக உள்ளதால், அங்கும் அதிக அளவில் பயிர் செய்யப்படுகிறது. மேலும், ஜவ்வரிசி தயாரிப்புக்கும் இக் கிழங்கு பயன்படுவதால், தேவாரம் பகுதியில் பயிர் செய்யப்படும் மரவள்ளிக் கிழங்கு, கேரளம், சேலம், கோவை உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. இந்த ஆண்டு பருவ மழையினாலும், 18 ஆம் கால்வாயில் தண்ணீர் திறந்துவிட்டதாலும், இப்பகுதியில் மரவள்ளிக் கிழங்கு விளைச்சல் அதிகரித்துள்ளது.இது, அதிக பராமரிப்புச் செலவில்லாமல் விளைவிக்கப்படுவதால், தற்போது விளைச்சல் அதிகரித்துள்ள நிலையில் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதே நேரத்தில், தற்போது கேரளத்திலும் மரவள்ளிக் கிழங்கு விளைச்சல் அமோகமாக உள்ளதால், அவர்கள் இங்கு வந்து மரவள்ளிக் கிழங்கு கொள்முதல் செய்வதை குறைத்துக் கொண்டனர்.மேலும், சேலம், கோவை உள்ளிட்ட பகுதிகளில் மாவு, ஜவ்வரிசி ஆலைகளுக்கு கொள்முதல் செய்யப்படும் மரவள்ளிக் கிழங்கின் பால் அளவை வைத்தே வாங்கப்படுகிறது. இதனால், மரவள்ளிக் கிழங்கின் விலை மிகவும் குறைந்துள்ளது. ஒரு கிலோ 5 ரூபாய்க்கே விற்பனை செய்யப்படுகிறது என்பதால், விவசாயிகளுக்கு உற்பத்தி செலவு கூட கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

**ஒரே பிரசவத்தில் இரண்டு கன்றுகளை ஈன்ற பசு**

ஆண்டிபட்டி அருகே பசு ஒன்று ஒரே பிரசவத்தில் இரண்டு கன்றுகளை ஈன்றது. ஆண்டிபட்டி லட்சுமிபுரத்தை சேர்ந்தவர் விவசாயி காந்திராஜன். இவர் ஜெர்ஸி இன பசுவை வளர்த்து வந்தார். பசுவுக்கு சினை ஏற்பட்டிருந்தது. திங்கள்கிழமை பசுவுக்கு கன்று ஈனுவதில் சிரமம் ஏற்பட்டதையடுத்து கோம்பைத் தொழு கால்நடை அரசு மருத்துவர் வேயிலானுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து சம்பவ

இடத்துக்குச் சென்ற மருத்துவர் பசுக்கு சிகிச்சையளித்தார். இதில் பசு இரண்டு பெண் கன்றுகளை ஈன்றது. இதையடுத்து இப்பகுதி மக்கள் மாடு, கன்றுகளை ஆச்சரியத்துடன் பார்த்துச் சென்றனர்.

**அருப்புக்கோட்டையில் 13 மி.மீ. மழைப்பதிவு**

அருப்புக்கோட்டை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் திங்கள்கிழமை மழை பெய்தது.இந்த மழையால் சாலைகளிலும், தெருக்களிலும் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. சாலையோரப் பள்ளங்களில் மழைநீர் தேங்கியது. செவ்வாய்க்கிழமை காலை 8 மணி நிலவரப்படி அருப்புக்கோட்டையில் 13 மி.மீ. மழைப் பதிவானது.

**ராஜபாளையத்தில் விற்பனைக்கு குவிந்துள்ள கேரள பலாப்பழம்**

கேரளாவில் சீசன் தொடங்கியுள்ள நிலையில், ராஜபாளையத்திற்கு கேரள பலாப்பழம் அதிகளவில் கொண்டு வரப்பட்டு விற்கப்பட்டு வருகின்றன.ராஜபாளையம் பகுதியில் மலையடிவாரப் பகுதியில் பலாமரங்கள் பரவலாக பயிரிடப்பட்டுள்ளன. ஆனால், இங்கு இன்னும் பலாக்காய் விளைச்சல் தொடங்கவில்லை.ராஜபாளையத்திற்கு பன்ருட்டி பகுதியில் இருந்து பலாப்பழம் விற்பனைக்கு வந்தன.தற்போது கேரளத்திலுள்ள கொல்லம், திருவனந்தபுரம், பத்தனம்திட்டா மாவட்டங்களில் பலாக்காய் விளைச்சல் தொடங்கியுள்ளது. அங்கு பலாப்பழம் சீசன் களைகட்டியுள்ளது. இதைத் தொடர்ந்து கேரளத்திலிருந்து ராஜபாளையம் பகுதிக்கு சாதாரணப்பலா, வேர்ப்பலா, செண்பகப்பலாப் பழங்கள் விற்பனைக்கு வரத் தொடங்கியுள்ளன. 10 கிலோ எடையுள்ள ஒரு பலாப்பழம் ரூ.200 வரை விற்கப்படுகின்றது. இது போல் கேரளத்திலிருந்து செவ்வாழைப்பழம், நேந்திரம்பழம், பூவன்பழம் போன்ற வாழைப்பழங்களும் தற்போது அதிகளவில் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்டப் பகுதிகளில் விளையும் இந்த பழங்களை விட கேரளத்தில் விளையும் இந்த ரக பழங்கள் அதிக ருசியுடன் இருப்பதால், அதிகளவில் மக்கள் வாங்கிச் செல்வதாக, வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**மே 2-இல் கோத்தகிரியில் காய்கறிக் கண்காட்சி**

மே 2-ஆம் தேதி கோத்தகிரியில் காய்கறிக் கண்காட்சி தொடங்குகிறது.

நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் தொடங்கியுள்ளதால், சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அதிகரித்து காணப்படுகிறது. மே 1-ஆம் தேதி முதல் 3 நாள்கள் தொடர் விடுமுறையை முன்னிட்டு, உதகையிலுள்ள அனைத்து தங்கும் விடுதிகளும் தற்போதே முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. கேரளம், கர்நாடக மாநில சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அதிகளவில் உள்ளது. மழை இல்லாமல் கடந்த 2 நாள்களாக உதகையில் இயல்பான காலநிலை நிலவுவதால் வழக்கமான சீசன் பருவநிலை அனைவரையும் கவரும் வகையில் அமைந்துள்ளது. இந்நிலையில், தோட்டக் கலைத் துறையின் சார்பில் 2 நாள் காய்கறிக் கண்காட்சி மே 2-ஆம் தேதி (சனிக்கிழமை) தொடங்குகிறது. 30 நாள்களுக்கான கோடை விழாவும் தொடங்குகிறது. இந்நிகழ்ச்சிகளை, கோத்தகிரி நேரு பூங்காவில் சுற்றுலாத்துறை அமைச்சர் சண்முகநாதன் தொடங்கி வைக்கிறார். இதில், சுற்றுலாத்துறை செயலர் ஆர்.கண்ணன், சுற்றுலாத்துறை ஆணையர் ஹர்சகாய் மீனா உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். கோத்தகிரி காய்கறிக் கண்காட்சியையொட்டி, காய்கறிகளாலான பிரம்மாண்ட ஹெலிகாப்டர் உருவம் உருவாக்கப்பட்டு வருகிறது. இதைத்தவிர பல்வேறு மாவட்டங்களில் விளையும் காய்கறிகளைக் கொண்டு பல்வேறு உருவங்களும், காட்சி அரங்குகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், நீலகிரி மாவட்டத்திலுள்ள தனியார், அரசுப் பூங்காக்களில் மலர்களை வளர்த்து வருபவர்கள் அவற்றை கண்காட்சிப் போட்டிக்காக பதிவு செய்துள்ளனர். பூங்காக்களை ஆய்வு செய்யும் பணி ஏப்ரல் 29 முதல் மே 5-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. கோத்தகிரி, குன்னூர் பகுதிகளில் உள்ள 87 பூங்காக்களும், உதகை, கூடலூர் பகுதிகளில் உள்ள 95 பூங்காக்களும் இந்த ஆய்வுக்கான பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

**வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மலை வேம்பு பூங்கா**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பண்ணை மேலாண்மைத் துறை சார்பில் மலை வேம்பு பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளிலும் மரம் வளர்க்கும் திட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு பாடத் திட்டத்தை கொண்டு வரவேண்டும் என்று பல்கலைக்கழக மானியக் குழு உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து, பல்கலைக்கழகங்கள், அதன் உறுப்புக் கல்லூரிகள், இணைவு பெற்ற கல்லூரிகளில் "ஒரு மாணவருக்கு ஒரு மரம்' என்ற திட்டத்தின்கீழ் மரக் கன்றுகள் நடும் பணி நடைபெற்று வருகிறது.

அதன்படி, கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பண்ணை மேலாண்மைத் துறை, நாட்டு நலப் பணித் திட்டம் ஆகியவற்றின் சார்பில் மலை வேம்பு பூங்கா அமைக்கும் பணி திங்கள்கிழமை நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் கிழக்குப் பண்ணையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 760 மலை வேம்பு மரக் கன்றுகள் நடப்பட்டன.துணை வேந்தர் கு.ராமசாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பயிர் மேலாண்மைத் துறை இயக்குநர் சி.ஜெயந்தி, வேளாண் கல்லூரி முதன்மையர் ச.மகிமை ராஜா, பண்ணை மேலாண்மைத் துறைத் தலைவர் சி.சின்னுசாமி, நாட்டு நலப் பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் க.குமுதா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மலை வேம்பு மரம் மருத்துவ குணம் வாய்ந்தது. டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கஷாயம் தயாரிக்கவும், உயிரி எரிபொருள் தயாரிக்கவும் மலை வேம்பு பயன்படுவதால், ஒருவருக்கு ஒரு மரம் திட்டத்தின்கீழ் ஒரே பகுதியில் 760 மரக் கன்றுகள் நடப்பட்டு பூங்கா உருவாக்குவதாக பல்கலைக்கழகச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு வங்கிகளில் உரம் இருப்பு வைக்க ஆட்சியர் அறிவுறுத்தல்**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் உர விற்பனை மையங்களில் அனைத்து உரங்களையும் போதிய அளவில் இருப்பு வைத்து, விவசாயிகளுக்குத் தட்டுப்பாடின்றி கிடைக்கச் செய்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி கேட்டுக் கொண்டார். வேளாண் துறையின் சார்பில் நாமக்கல் மாவட்டத்திலுள்ள அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க செயலர்கள் மற்றும் தனியார் உர விற்பனையாளர்களுக்கான உரங்களின் இருப்பு மற்றும் விற்பனை தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு தலைமை வகித்து மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி பேசியது: அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலும், குறைந்தபட்சம் 5 மெட்ரிக் டன் யூரியாவும், 2 மெட்ரிக் டன் டிஏபி உரமும் தொடர்ந்து இருப்பு வைத்து, விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை எவ்வித தட்டுப்பாடின்றியும், தாமதமின்றியும் உரிய நேரத்தில் கிடைக்கச் செய்திட வேண்டுமென அரசு உத்தரவிட்டுள்ளது. உரங்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும்போது அவர்களுடைய பயிர் மற்றும் சாகுபடி பரப்புக்கேற்ற அளவில் உரங்கள் வழங்கப்பட வேண்டும். அதிகபட்ச சில்லறை விற்பனை விலைக்கு மேல் உரங்களை விற்பனை செய்யப்படுவதாகவோ, விவசாயிகளுக்காக வழங்கப்படும் உரத்தினை தவறாகப் பயன்படுத்துவதாகவோ புகார்கள் ஏதேனும் வரப்பெற்றால் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் அந்த உர விற்பனை நிலையங்கள் மீது உரக்கட்டுப்பாடு சட்டம் 1985-இன்படி, கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நாமக்கல் மாவட்டத்தில் தற்போது சொட்டு நீர் பாசனம் பிரபலமடைந்து வருவதால், நீரில் கரையும் உரங்களை அனைத்து உர விற்பனையாளர்களும் போதிய அளவு இருப்பு வைத்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட வேண்டும். விவசாய உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு காணும் வகையிலும், நாமக்கல் மாவட்டம் இந்த ஆண்டும் உணவு தானிய உற்பத்தியில் இலக்கினை எய்திட அனைவரும் இணைந்து சிறப்பாக செயல்பட வேண்டும் என்றார்.

கூட்டத்தில் வேளாண் இணை இயக்குநர் ந.கார்த்திகேயன், கூட்டுறவு இணைப் பதிவாளர் காந்திநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் எம்.கிருஷ்ணகுமார், வேளாண் உதவி இயக்குநர் கு.ஜெகதீசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தஞ்சையில் மத்திய வேளாண் பல்கலைக்கழகம் அமைக்க வலியுறுத்தல்**

தஞ்சாவூரில் மத்திய வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்களவையில் தஞ்சாவூர் எம்.பி. கு. பரசுராமன் செவ்வாய்க்கிழமை வலியுறுத்தினார்.மக்களவையில் பரசுராமன் பேசியதாக அவரது அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இந்தியாவின் அடிப்படையாக விளங்கும் வேளாண்மைத் தொடர்பான கல்வி மற்றும் ஆய்வுகளுக்காக நாட்டில் 65 பல்கலைக்கழகங்கள் உள்ளன. ஆனால் ஒன்றே ஒன்றுதான்மத்திய வேளாண்மைப் பல்கலைக்கழகம். அதுவும் மணிப்பூரில் உள்ளது. வளர்ச்சியடைந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை வேளாண்மைத் துறைக்குக் கொண்டு செல்ல வேண்டிய கடமையும் பொறுப்பும் நம் அனைவருக்கும் உண்டு. அதைமத்திய வேளாண்மைப் பல்கலைக்கழகம்தான் சிறப்பாகச் செய்ய முடியும்.எனவே, தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சாவூர் மாவட்டத்தில் மத்திய வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை அமைக்க வேளாண்மைத் துறை அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் உற்பத்தி மட்டுமல்லாமல், தென்னை, வாழை, கடலை, உளுந்து, பயறு போன்ற பயிர்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. தஞ்சாவூர் மாவட்டம் மட்டுமல்லாமல், அதைச் சுற்றியுள்ள 10 மாவட்டங்களும் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களைத்தான் அடிப்படையாகக் கொண்டுள்ளன.இந்த மாவட்டங்களின் பொருளாதாரம் வேளாண்மையை மட்டுமே சார்ந்துள்ள நிலையில் மத்திய வேளாண்மைப் பல்கலைக்கழகம் என்பது மிக மிக அவசியம். எனவே, வேளாண் துறை அமைச்சர் இக்கோரிக்கையை ஏற்று உடனடியாக மத்திய வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைத் தஞ்சாவூரில் அமைக்க வேண்டும்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் 58 மி.மீ. மழை**

பெரம்பலூர், ஏப். 28: பெரம்பலூர் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரை 58 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 11 மணி முதல் பலத்த மழை பெய்தது. இதேபோல, மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களிலும் பரவலான மழை பெய்தது. இதனால், சாலைகளிலும், கால்வாய்களிலும் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. அதன்படி, செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரை பெரம்பலூர் -28 மில்லி மீட்டரும், செட்டிக்குளம் -5 மில்லி மீட்டரும், பாடாலூர்- 20 மில்லி மீட்டரும், வேப்பந்தட்டை -3 மில்லி மீட்டரும், தழுதாழை 2 மில்லி மீட்டரும் என மொத்தம் 58 மில்லி மீட்டர், சராசரியாக 11.60 மில்லி மீட்டர் மழை பெய்தது.

**ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலம் ரூ. 1.32 கோடிக்கு பருத்தி விற்பனை**

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலம் இதுவரை ரூ. 1.32 கோடிக்கு பருத்தி விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.பெரம்பலூர் அருகே எளம்பலூரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செவ்வாய்க்கிழமை ஏல முறையில் நடைபெற்ற விற்பனையை மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் பின்னர் அவர் அளித்த பேட்டி:பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக சராசரியாக 27,230 ஹெக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 109 விவசாயிகள் 1,446 மூட்டைகளில் 510 குவிண்டால் பருத்தியை ஏல விற்பனைக்கு கொண்டு வந்தனர். மறைமுக ஏலமுறையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விற்பனையில், அதிகபட்சமாக குவிண்டால் ஒன்று ரூ. 4,269 -க்கு விற்பனையானது. இதன் மூலம் 510 குவிண்டால் பருத்தி ரூ. 19,30,000- க்கு விற்பனையானது.5.1.2015 முதல் இதுவரை, 798 விவசாயிகளின் 3,476

குவிண்டால் (347.6 டன்) எடையுள்ள 9,413 மூட்டை பருத்தி ரூ. 1 கோடியே 32 லட்சத்து 91 ஆயிரத்து 766க்கு விற்பனையாகியுள்ளது.

விவசாயிகள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு கொண்டுவரும் பருத்திக்கு விலை கட்டுபடியாகவில்லையெனில், ஒழுங்குமுறை விற்பனைக்கூட கிடங்கில் வைத்திருந்து நல்ல விலை கிடைக்கும் போதும் விற்பனை செய்யலாம்.ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பருத்தி மூட்டைகளை வைக்க இட வசதி அதிகளவில் உள்ளதால், விவசாயிகள் தாங்கள் விளைவித்த பருத்தியை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கமிஷன் இன்றி விற்பனை செய்து பயன்பெறலாம் என்றார் ஆட்சியர் தரேஸ் அஹமது.

**கால்நடை சிறப்பு மருத்துவ முகாம்**

ஆத்மா திட்டத்தின் கீழ் தவளகுப்பம் உழவர் உதவியகத்துக்கு உள்பட்ட டி.என்.பாளையத்தில், கால்நடை குழுக்களுக்கு குடற்புழு நீக்கம் குறித்த செயல் விளக்கம் மற்றும் சிகிச்சை முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

ஆத்மா திட்ட இயக்குநர் ரவிபிரகாசம் தலைமை வகித்தார். இணை வேளாண் இயக்குனர் (இடுபொருள்) சந்தானகிருஷ்ணன் ஆத்மா திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். வேளாண் அலுவலர் சத்யன் வரவேற்றார்.ஆத்மா கால்நடை மருத்துவர் செல்வமுத்து, குடற்புழு நீக்கம் குறித்த செயல்விளக்க பயிற்சி அளித்தார். முகாமில் 63 கறவை மாடுகளுக்கும் 106 ஆடுகளுக்கும் குடற்புழு நீக்கத்துக்கான சிகிச்சை அளிக்கப்பட்டது. முகாமில் கால்நடைகளுக்கு ஊட்டச்சத்து மாவு, ஊட்டச்சத்து திரவம் இலவசமாக வழங்கப்பட்டது.கிராம விரிவாக்க பணியாளர்கள் ஓம் பிரகாசம், முத்துகுமரன் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் விநாயகம் நன்றி கூறினார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

**யூரியா உரத் தட்டுப்பாட்டை போக்கும் வகையில் ஆலைகளை இயக்க அனுமதி வழங்க வேண்டும்**

விழுப்புரம்: யூரியா தட்டுப்பாட்டை போக்கும் வகையில் தடை விதிக்கப்பட்டுள்ள உர ஆலைகள் மீண்டும் இயக்கிட மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும் என விழுப்புரம் தொகுதி எம்.பி., ராஜேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.விழுப்புரம் தொகுதி எம்.பி., ராஜேந்திரன், கடந்த 23ம் தேதி லோக் சபாவில் நடந்த விவசாய மானியக் கோரிக்கையில் கலந்து கொண்டு பேசியதாவது:நடப்பு நிதியாண்டு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு குறைக்காத துறையாக ரசாயனத்துறை, இந்த நிதி நிலை அறிக்கையில் காணமுடிகிறது. கடந்த ஆண்டில் திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி இறுதி ஒதுக்கீடு 73 ஆயிரம் கோடியிலிருந்து, 71 ஆயிரம் கோடி ரூபாயாக குறைக்கப்பட்ட நிலையில், இந்தாண்டு மீண்டும் 72 ஆயிரத்து 997 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது திருப்திகரமாக அமைந்துள்ளது. உரம் மொத்த உற்பத்தி அளவு குறைக்கப்பட்டு வருவது, தேவை நிறைவு கருதி இறக்குமதி செய்யப்படும் ரசாயன உர இறக்குமதி அளவு குறைக்கப்பட்டு வருவது கவலை அளிக்கிறது. யூரியா மீதான பத்து சதவிகித ரயில்வே சரக்கு கட்டண உயர்வு விலையேற்றத்திற்கு வழி வகுக்குமோ என்ற கவலை பெரிய அளவில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள விவசாய உற்பத்தியை அதிகரிக்க இயலாவிட்டாலும், தக்க வைத்துக் கொள்ளும் வகையில் மத்திய, மாநில அரசுகளின் விவசாய நலத்திட்டங்கள், உர விநியோக முறைகள் அமைய வேண்டும். தமிழகத்தில் யூரியா தட்டுப்பாட்டை போக்க தடை விதிக்கப்பட்டுள்ள அரசுத்துறை நிறுவனமான சென்னை உர ஆலை, தனியார் நிறுவனமான ஸ்பிக் நிறுவன உர ஆலை ஆகியவை மீண்டும் இயக்க மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும். முந்தைய ஐ.மு., கூட்டணி அரசின் தவறான

அணுகுமுறைகள் காரணமாக உரவிலை ஏற்றமும், உரப்பொருள் தட்டுப்பாடும் ஏற்பட்டது. இந்த நிØயில் இருந்து மீள தற்போதுள்ள மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். டைபாஸ்பேட் போன்ற விவசாயிகள் அதிகம் பயன்படுத்தாத உர உற்பத்தியை தவிர்த்து விவசாயிகள் பெரிதும் பயன்படுத்தும் விலை குறைவான, சுற்றுச்சூழல் பாதிப்பு வாய்ப்பு சற்று குறைவான உரங்களின் <உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு ராஜேந்திரன் எம்.பி., பேசினார்.

## பால் சுரப்பை அதிகரிக்கும் "அசோலா'பனமரத்துப்பட்டி விவசாயிகள் ஆர்வம்

பனமரத்துப்பட்டி:பனமரத்துப்பட்டி வட்டார விவசாயிகள், பால் உற்பத்தியை அதிகரிக்க, குறைந்த செலவில், புரதசத்து நிறைந்த அசோலா என்ற தண்ணீரில் மிதக்கும் தாவரத்தை உற்பத்தி செய்து, கறவை மாடுகளுக்கு உணவாக கொடுக்கின்றனர்.சேலம், பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகள், கால்நடை வளர்ப்பதை உப தொழிலாக செய்து வருகின்றனர். கறவை மாடுகளுக்கு, பசும் தீவனம் கொடுத்தால், பால் சுரப்பு அதிகரித்து, கூடுதல் லாபம் கிடைக்கும்.ஆனால், வறட்சி உள்ளிட்ட பல காரணங்களால், கறவை மாடுகளுக்கு பசுந்தீவனம் கொடுக்க முடியாமல், புண்ணாக்கு, தவிடு உள்ளிட்ட அடர் தீவனங்கள் கொடுக்கப்படுகிறது. இதனால், புரோட்டீன் உள்ளிட்ட ஊட்டசத்துகள் பற்றாக்குறை ஏற்பட்டு, பால் சுரப்பு குறைகிறது.கால்நடை பராமரிப்புத்துறை, நீர் வள நிலவளத்திட்டம் சார்பில், குறைந்த செலவில், புரதசத்துகள், தாது சத்துகள் நிறைந்த அசோலா என்ற தாவரத்தை உற்பத்தி செய்து, கறவை மாடுகளுக்கு வழங்க, விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதையடுத்து, தண்ணீரில் மிதக்கும், மூக்குத்தி செடி என்ற அசோலா உற்பத்தி செய்வதில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.கால்நடை மருத்துவர் ஒருவர் கூறியதாவது:ஒரு கிலோ அசோலா உற்பத்தி செய்ய, 75 பைசா மட்டுமே செலவாகும். ஒரு கிலோ

புண்ணாக்கு, ஒரு கிலோ அசோலாவுக்கு சமம். அசோலா உட்கொள்வதால், பால் உற்பத்தி, 15 முதல், 20 சதவீதம் அதிகமாகிறது. அசோலாவில் புரதசத்து, 35, தாது சத்துகள், 12, அமினோ அமிலம் கார்போஹைட்ரேட்ஸ், எண்ணை சத்துகள், 10 சதவீதம் இருக்கிறது. கோழிகளுக்கு அசோலா கொடுத்தால், அதிக எடை கிடைக்கும். அசோலா உற்பத்தி செய்து, வருமானம் ஈட்டலாம். பெரமனூர் விவசாயி சத்தியநாராயணன் கூறியதாவது:ஒரு கறவை மாட்டுக்கு, நாள்தோறும், 100 கிராம் அசோலா எடுத்து, தவிடு சேர்த்து, கொடுத்து வருகிறோம். அசோலா சாப்பிடுவதால், பால் கூடுதலாக சுரக்கிறது. மாடுகளுக்கு உடல் வளர்ச்சி நன்றாக இருக்கிறது. ஒரு கிலோ புண்ணாக்கு, 45 ரூபாய்க்கு விற்கிறது.அதனால், புண்ணாக்கை தவிர்த்து, அசோலா கறவை மாடுகளுக்கு கொடுத்து வருகிறோம்.இவ்வாறு அவர்கள் கூறினார்.

## ரூ.60 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்

ராசிபுரம்:நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, நடந்த மஞ்சள் ஏலத்தில், 60 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.தமிழகத்தில், ஈரோட்டுக்கு அடுத்ததாக நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் ஏலம் நடக்கும்.தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள், தங்களது மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள், நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றனர்.

நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,000 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 9,421க்கும், குறைந்த பட்சம், 7,529 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம், அதிக பட்சம், 8,559க்கும், குறைந்த பட்சம், 7,296

ரூபாய்க்கும் ஏலம்போனது.அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 19 ஆயிரத்து, 171க்கும், குறைந்த பட்சம், 12 ஆயிரத்து, 669 ரூபாய்க்கும் ஏலம் போனது. இதில், 1,000 மூட்டை மஞ்சள், 60 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

**மாம்பழங்களின் தரம் ஆய்வு**

ஊட்டி : ஊட்டியில், மாம்பழங்களின் தரம் ஆய்வு செய்யப்பட்டது.நீலகிரி மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் டாக்டர் ரவி தலைமையில், நேற்று ஊட்டி மார்க்கெட்டில், விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மாம்பழங்களின் தரம் பரிசோதிக்கப்பட்டது. 'கார்பைட் கற்கள் மூலம், மாம்பழங்களை பழுக்க வைக்க கூடாது' என, வியாபாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

**பாகற்காய் விளைச்சல் அமோகம்: விலையில் மட்டும் 'கசப்பு'**

கூடலூர் : கூடலூர் பகுதியில் பாகற்காய் அமோகமாக விளைந்தும், போதிய விலை கிடைக்காததால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கூடலூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பாகற்காய் விளைவிக்கப்படுகின்றன. நடப்பாண்டு, சரியான நேரத்தில் கோடைமழை பெய்ததால், பாகற்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது.ஆனால், இதன் விலை நாளுக்கு நாள் குறைந்து வருவதால், சிறு விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.இப்பகுதி சிறு விவசாயிகள் கூறுகையில், “கூடலூரில் உற்பத்தி செய்யப்படும், பாகற்காய், பெருமளவில் கேரளா மாநிலத்துக்கு கொண்டு செல்லப்படுகிறது. இந்த சீசனில், பொதுவாக, கிலோவுக்கு, 20 ரூபாய் விலை கிடைக்க வேண்டும். ஆனால், தற்போது கிலோவுக்கு, 13 ரூபாய் மட்டும் கிடைக்கிறது. இதனால், சிறு விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.இதனை தவிர்க்க, கூடலூரில் குடோன் வசதியுடன் கூடிய, காய்கறி ஏல மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்,” என்றார்.

**கோரை விவசாயிகள் மழையால் மகிழ்ச்சி**

குளித்தலை,:குளித்தலை காவிரி டெல்டா பகுதிகளான லாலாபேட்டை, கே.பேட்டை, குளித்தலை, மேட்டுமருதூர், நங்கவரம், நச்சலூர், பொய்யாமணி பகுதியில், கோரை சாகுபடி விவசாயிகள் உள்ளனர். கோரை விவசாயத்தில், ஆறு மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது. ஒரு ஏக்கர் கோரை, 40 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய் வரைக்கு விற்பனை செய்யப்படுகிறது. தற்போது பெய்த மழையால் கோரைக்கு தேவையான தண்ணீர் கிடைத்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**ஒட்டன்சத்திரத்தில் தக்காளி நாற்றுகள் விற்பனை ஜோர்! கோடை மழையால் விவசாயிகள் ஆர்வம்**

ஒட்டன்சத்திரம் : கோடை மழை மற்றும் காய்கறி விலை ஏற்றம் காரணமாக தக்காளி, மிளகாய் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டியதால் ஒட்டன்சத்திரத்தில் நாற்று விற்பனை சூடு பிடித்துள்ளது.

ஒட்டன்சத்திரம் அருகே உள்ள அத்திக்கோம்பை, சாலைப்புதூர், அம்பிளிக்கை உள்ளிட்ட கிராமங்களில் அதிக எண்ணிக்கையில் நாற்றுப் பண்ணைகள் உள்ளன. திண்டுக்கல், மதுரை, தேனி, திருப்பூர் விவசாயிகள் இங்கு வந்து நாற்றுகளை வாங்கிச் சென்று நடவு செய்கின்றனர். கடந்த சில நாட்களாக தக்காளி, மிளகாய் உள்ளிட்ட காய்களின் விலை குறைவாக இருந்தது. கோடை வெயில் காரணமாக கிணறுகளில் தண்ணீர் இருப்பு வெகுவாக குறையத் தொடங்கியது. எனவே விவசாயிகள் சாகுபடியில் ஆர்வம் காட்டாமல் இருந்தனர். இந்நிலையில் இப்பகுதியில் சில நாட்களாக கோடை மழை பெய்ததால் வெப்பம் குறைந்து குளுமையான சூழல் காணப்படுகிறது. மழை காரணமாக சில விவசாயிகள் நடவு செய்த தக்காளி செடியில் இருந்த பூக்கள் உதிர்ந்துவிட்டன. இதனால் மார்க்கெட்டில் தக்காளி வரத்து குறைந்தது. இதனை அடுத்து விலை அதிகரித்து கிலோ ரூ.15 வரை விற்றது. இப்போது கோடை மழை கைகொடுக்கும், தக்காளிக்கு கட்டுபடியான விலை கிடைக்கும் என்ற நம்பிக்கை காரணமாக விவசாயிகள் தக்காளி நாற்றுகள் வாங்கி நடுவதற்கு ஆர்வம் காட்டி

வருகின்றனர். இதனால் நாற்றுப் பண்ணைகளில் தக்காளி விற்பனை அதிகரித்துள்ளது.நாற்றுப்பண்ணை உரிமையாளர் ஒருவர் கூறுகையில், "தக்காளி ஆயிரம் நாற்றுகள் ரூ.450க்கு விற்கிறது, இதற்கு அடுத்து மிளகாய் நாற்றுகளையும் விவசாயிகள் கேட்டு வாங்கிச் செல்கின்றனர்," என்றார்.

**கால்நடை தீவனம்: தற்காலிக தீர்வு**

நத்தம் : நத்தம் பகுதியில் பெய்த தொடர் மழையால் கால்நடை தீவனப் பிரச்னைக்கு தற்காலிக தீர்வு ஏற்பட்டுள்ளது. நத்தம் சுற்று வட்டாரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. முழுக்க முழுக்க விவசாய தொழில் செய்கின்றனர். மா, தென்னை அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. விவசாயம் சார்ந்த தொழிலான கால்நடை வளர்ப்பும் அதிக அளவில் நடக்கிறது. மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக போதிய மழை பெய்யவில்லை. இதனால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. கால்நடை வளர்ப்பதிலும் சிக்கல் ஏற்பட்டது. தீவனம் இல்லாததால் பெரும்பாலோனோர் ஆடு, மாடுகளை விற்கும் சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக நத்தம் சுற்றுப்பகுதிகளில் பரவலாக சாரல் மழையும் ஒரு சில பகுதிகளில் கன மழையும் பெய்தது. தொடர் மழையால் புல், செடி, கொடிகள் தழைத்துள்ளன. இதையடுத்து தற்போது தீவனப்பற்றாக்குறை பிரச்சினைக்கு தற்காலிகமாக தீர்வு ஏற்பட்டுள்ளது. இதனால் கால்நடை வளர்ப்போர் ஆறுதல் அடைந்துள்ளனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**நீலகிரி மாவட்டத்தில் செயற்கை முறையில் மாம்பழங்களை பழுக்க வைத்து விற்றால் கடும் நடவடிக்கை**

நீலகிரியில் செயற்கை முறையில் பழுக்க வைக் கப்பட்ட மாம்பழங்களை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக் கப்படும் என்று உணவு பாதுகாப்பு அதிகாரி தெரிவித்து உள்ளார்.மாம்பழ சீசன் :தமிழகத்தில் தற்போது மாம் பழ சீசன் தொடங்கி உள்ளது. இதன் காரணமாக நீலகிரி மாவட்டத்திற்கு சேலம் உள் ளிட்ட மாவட்டங்களில் இருந்து விற்பனைக்காக மாம் பழங்கள் கொண்டு வரப்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து நேற்று மாவட்ட உணவு பாது காப்பு அதிகாரி டாக்டர் ரவி பழ விற்பனை கடைகள், மொத்த விற்பனை கடைகளில் சோதனை மேற்கொண்டார். மேலும் பிற மாவட்டங்களில் இருந்து லாரியில் கொண்டு வரப்பட்ட பழங்களையும் அவர் ஆய்வு செய்தார். இதனை தொடர்ந்து அவர் கூறியதாவது:-மாம்பழ சீசன் தொடங்கி உள்ளதால் ஊட்டி மார்க்கெட் உள்பட பல்வேறு இடங்களில் மாம்பழங்கள் விற்னை செய் யப்பட்டு வருகிறது. தற்போது மாம்பழங்களின் விலை அதிக மாக உள்ளதால் செயற்கை முறையில் பழுக்க வைக்கப் பட்ட மாம்பழங்கள் விற்கப்படு வதாக வந்த புகாரையடுத்து சோதனை செய்யப்பட்டது. சிறுநீரகம் பாதிப்பு :இதுபோன்ற கார்பைடு கல் மற்றும் ரசாயன பொருட்களை கொண்டு செயற்கை முறையில் பழுக்க வைக்கப்பட்ட மாம் பழங்களை சாப்பிட்டால் வயிறு உபாதைகள் ஏற்படும். மேலும் குழந்தைகள் சாப்பிட் டால் வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்படும். ஒரு சில நேரங்களில் சிறு நீரகமும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.எனவே பொதுமக்கள் மாம் பழங்களை வாங்கும் போது மிகவும் கவனமாக வாங்க வேண்டும். மாம்பழத் தின் ஒரு பகுதி மட்டும் நன்கு சிவந்து இருந்தால் அது செயற்கை முறையில் பழுக்க வைக்கப் பட்ட மாம்பழமாக இருக்க லாம்.எனவே எந்த மாம்பழம் வாங்கினாலும், வீட்டிற்கு சென்றதும்

மாம்பழங்களை உப்பு தண்ணீரில் நன்கு கழுவ வேண்டும். பின்னர் தோலை நீக்கி குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும். மேலும் செயற்கை முறையில் பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்களை விற்பனை செய்தால் சம்பந்தப் பட்ட வியாபாரிகள் மீது கடும் நட வடிக்கை எடுக்கப்படும். மேலும் இது குறித்து பொது மக்கள் எங்களுக்கு தகவல் தெரிவிக்கலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

**கோத்தகிரி நேரு பூங்காவுக்கு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு 2-ந்தேதி காய்கறி கண்காட்சி**



கோடை சீசனை முன் னிட்டு கோத்தகிரி நேரு பூங்காவுக்கு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. வருகிற 2-ந்தேதி காய்கறி கண்காட்சி தொடங் குகிறது. கோடை விழா : நீலகிரி மாவட்டத்தில் நில வும் தட்பவெப்ப நிலையை அனுபவிக்கவும், இங்கு உள்ள பூங்கா மற்றும் பள்ளத்தாக்கு மற்றும் காட்சிமுனைகளை காண ஆண்டுதோறும் ஏராள மான வெளிநாடு மற்றும் வெளி மாநில சுற்றுலா பயணி கள் இங்கு வந்து செல்கின்ற னர். இவ்வாறு வந்து செல்லும் சுற்றுலா பயணிகளை மகிழ் விக்கும் வகையில் மே மாதத் தில் கோடை விழா மாவட்ட நிர்வாகத்தால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. இந்த கோடை விழாவின் ஒரு பகுதி யாக கோத்தகிரியில் உள்ள நேரு பூங்காவில் காய்கறி கண்காட்சியும், ஊட்டியில் மலர்கள் கண்காட்சியும், கூட லூரில் வாசனை திரவிய கண் காட்சி, குன்னூரில் பழக்கண் காட்சியும் நடத்தப்பட்டு வரு

கிறது.காய்கறி கண்காட்சி :இதில் கோடை விழாவின் முதல் விழாவாக கோத்தகிரி நேரு பூங்காவில் காய்கறி கண் காட்சி வருகிற மே மாதம் 2, 3-ந் தேதிகளில் நடைபெற உள் ளது. இதற்காக இந்த பூங்காவில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல்வேறு விதமான மலர்ச் செடிகள் நடவு செய்யப்பட்டு உள்ளன. இதில் தற்பொழுது டேலியா, மேரி கோல்டு, இன்காமேரிகோல்டு, பிட் டோனியா, பிலாக்ஸ், தையன் தாஸ், பேன்சி, டேபிள் ரோஸ், பப்பி, சால்வியா, காஸ்மாஸ் உள்ளிட்ட செடிகளில் பல்வேறு வண்ணங்களில் மலர்கள் பூத்து குலுங்கிறது.சுற்றுலா பயணிகள் ஆர்வம் .தற்பொழுது பள்ளி, கல் லூரிகளுக்கு விடுமுறை விடப் பட்டு உள்ளதாலும், சமவெளி பகுதிகளில் வெலியின் தாக்கம் அதிகரித்து உள்ளதாலும் அங் கிருந்து சீசனை அனுபவிக்க தற்பொழுது சுற்றுலா பயணி களின் வருகை அதிகரிக்க தொடங்கி உள்ளது.இதனால் கோத்தகிரி நேரு பூங்காவில் பூத்துள்ள பல்வேறு வகையான வண்ண மலர்களை சுற்றுலா பயணிகள் வியப்பு டன் கண்டு களித்தும், ஆர்வத் துடன் புகைப்படம் எடுத்தும் மகிழ்ந்து செல்கின்றனர்.

# தினகரன்

**மழையால் விளைச்சல் பாதிப்பு தக்காளி விலை கிடுகிடு உயர்வு**

சேலம், : சேலம் மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து குறைந்ததால், விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. தமிழகத்தில் பரவலாக தக்காளி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் குறிப்பாக சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், திண்டுக்கல், தேனி உள்ளிட்ட மாவட்டங்களில் தக்காளி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இம்மாவட்டங்களில் இருந்து தமிழக முழுவதும் தக்காளி மார்க்கெட்டுக்கு

அனுப்பப்படுகிறது. கடந்த சில மாதங்களாக தமிழகம் முழுவதும் பரவலாக தக்காளி அமோக விளைச்சலை தந்தது. இதனால் விலை கடும் வீழ்ச்சியை சந்தித்தது. இந்நிலையில் கடந்த இரு வாரமாக பெய்து வரும் தொடர் மழையால் தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ள பகுதிகளில் நிலங்களில் தண்ணீர் தேங்குகிறது. இதனால் தக்காளி விளைச்சல் பாதித்துள்ளது. இதன் காரணமாக தக்காளி வரத்து சரிந்து, விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இது குறித்து சேலம் காய்கறி வியாபாரிகள் கூறியதாவது: தமிழகத்தில் தொடர் மழை காரணமாக பரவலாக தக்காளி விளைச்சல் பாதித்துள்ளது. கடந்த மூன்று வாரத்திற்கு முன்பு ஒரு கிலோ தக்காளி ரூ.8 முதல் ரூ.10க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது தக்காளி வரத்து பாதியாக குறைந்துள்ளதால் விலை கிடுகிடுவென உயர்ந்து, நேற்று நிலவரப்படி ரூ.20 முதல் ரூ.25 என விற்பனை செய்யப்பட்டது. இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

**பலாப்பழம் விலை உயர்வு**

ஆலங்குடி, : ஆலங்குடி பகுதியில் பலாப்பழம் விலை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அடுத்த கீழாத்தூர், மேலாத்தூர், வடகாடு, மாங்காடு, அணவயல், ஆவணம், கீரமங்கலம், செரியலூர், கொடிக்கரம்பை, பனங்குளம், குளமங்கலம், மறமடக்கி ஆகிய ஊர்களில் மா, பலா, வாழை ஆகியவை அதிகளவில் பயிரிடப்படுகிறது. பலா என்றாலே பண்ருட்டி என்ற பெயர் நீங்கி, தற்போது, ஆலங்குடி ஞாபகத்திற்கு வரும். அந்த அளவிற்கு இங்கு விளையும் பலா மிகவும் சுவையாக இருக்கும். இங்கு விளையும் பலாபழங்கள் காரைக்குடி, மானாமதுரை, மதுரை. ராமநாதபுரம் மட்டுமின்றி பிற மாநிலங்களுக்கும் அனுப்பி

வைக்கப்படுகிறது. பலா விலையும் தரத்திற்கு ஏற்றவாறு இருப்பதால் வியாபாரிகள் நேரில் வந்து கொள்முதல் செய்து விற்பனைக்காக லாரிகளில் ஏற்றி செல்கின்றனர். தற்போது இப்பகுதியில் பலா விளைச்சல் அதிகம் உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். இதுபற்றி கொத்தமங்கலம் ஊராட்சி தலைவர் பாண்டியன் கூறுகையில், இப்பகுதி விவசாயிகள் வயல்களின் வரப்போரங்களிலும், கிணற்றுப்பகுதிகளிலும் பலா மரங்களை வளர்த்து வந்தனர். இங்குள்ள மண் வளத்திற்கு ஏற்ப சுவையும், அதிக விளைச்சலும் இருப்பதால் விற்பனை அதிகமாக இருந்தது. இதனால் இப்பகுதி விவசாயிகள் வயல்கள் மட்டுமின்றி தனியாகவும் நிலம் குத்தகைக்கு எடுத்தும், தங்களது சொந்த நிலங்களிலும் பலா நட்டு பயனடைந்து வருகின்றனர். திருவிழா சீசனில் பலா விளைந்து விற்பனைக்கு வருவதால், முக்கனிகளில் ஒன்றான பலாவுக்கு எப்போதும் தனி மதிப்புதான். மற்ற விவசாயங்களுக்கு இணையாக பலாபழம் வருமானம் ஈட்டுவதால் அதிகளவில் இப்பகுதிகளில் பயிரிடப்படுகிறது. பண்ருட்டிதான் பலாவிற்கு பெயர் பெற்றிருந்தது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அடித்த புயலில் பெரும்பாலான மரங்கள் ஒடிந்து அழிந்து விட்டதால் அங்கு ரெகுலராக வாங்கி சென்ற வியாபாரிகள் தற்போது, ஆலங்குடி, ஆவணம், கீரமங்கலம், வடகாடு உள்ளிட்ட ஊர்களில் உள்ள கமிஷன் கடைகாரர்களிடம் வந்து வாங்கி சென்று விற்பனை செய்கின்றனர் என்றார். வியாபாரி பிரபாகர் கூறுகையில், சித்திரை பவுர்ணமி வரை பலாபழத்திற்கு சீசன்காலம் என்று சொல்லலாம். அதுவரை கிராக்கியாக இருக்கும். பிறகு விலை குறைய துவங்கும். இந்த ஆண்டு கடும் வெயிலின் தாக்கத்தால் நிறைய பலா பிஞ்சுகள் பால்வற்றி பட்டுப்போய் விட்டன. அதனால் பலாப்பழங்கள் விலை விவசாயிகளுக்கு

கட்டுபடியாகும் விலைக்கு போய்க்கொண்டிருக்கிறது.தற்போது, பலாபழங்கள் ரூ.50 முதல் 400வரை விலை போகிறது. இதனால் வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் நல்ல லாபம் கிடைக்கும். நல்ல விலை கிடைப்பதால் ஆலங்குடி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**விவசாயிகள் மண் பரிசோதனை செய்ய இதுவே சரியான நேரம்**

அன்னவாசல், : புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா நெல் அறுவடைப் பணிகள் நிறைவு பெற்று தற்சமயம் பயிர் இல்லாத நிலங்களில் மண் பரிசோதனை செய்து கொள்ள இதுவே சரியான நேரமென வேளாண் இணை இயக்குனர் ஷாஜகான், உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் சாந்தி, வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் ஆலோசனை தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா நெல் அறுவடைப் பணிகள் முடிவடைந்து பெரும்பாலான நிலங்கள் தற்போது பயிர்சாகுபடி செய்யாமல் தரிசாக உள்ளது. இந்நேரத்தில் நிலங்களில் மண் பரிசோதனை செய்வது மிகவும் அவசியமாகும். மனிதர்களுக்கு உடல் பரிசோதனை செய்து கொள்வது போன்று ஆண்டுக்கொரு முறை நமது மண்ணையும் பரிசோதனை செய்வது மண்வளத்தைப் பாதுகாக்க உதவுகிறது.மண் பரிசோதனை ஏன் செய்ய வேண்டும்?:மண்ணில் உள்ள தழை, மணி, சாம்பல் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களின் அளவை அறிந்திட, பயிர்களுக்குத் தேவையான உரமிடும் அளவை அறிந்திட, மண்ணில் உள்ள களர், உவர் அமிலத்தன்மைகளை அறிந்து தக்க சீர்திருத்தம் செய்திட, தேவைக்கேற்ப உரமிடுவதால் உரச்செலவைக் குறைக்க, இடும் உரம் பயிருக்கு முழுமையாகக் கிடைத்திட, உரச்செலவைக் குறைத்து அதிக மகசூல் பெற்றிட, அங்க கச்சத்தின்

அளவு அறிந்து நிலத்தின் நிலையான வளத்தைப் பெருக்கிட, மண்ணின் தன்மைக்கேற்ப பயிரைத் தேர்ந்தெடுக்க மண் பரிசோதனை செய்ய வேண்டும்.

**மண் பரிசோதனைக்கு மண் மாதிரி சேகரிப்பது எப்படி?:**

ஒரு வயலில் எடுக்கும் மண் மாதிரி அந்த வயலின் சராசரி தன்மையைக் காட்டும் வகையில் இருக்க வேண்டும். மண்ணின் வளமும், தன்மையும் ஒரே வயலில் கூட இடத்திற்கு இடம் மாறுபடும். ஆகையால் ஒரே இடத்தில் மண்மாதிரி எடுக்கக்கூடாது. ஏக்கர் ஒன்றுக்குக் குறைந்தது 10 இடங்களில் எடுத்துக் கலந்து அதிலிருந்து அரை கிலோ மண்மாதிரி எடுக்க வேண்டும்."ஏ" வடிவக் குழியின் ஆழம் பயிருக்குப் பயிர் மாறுபடும். நெல், கேழ்வரகு, கம்பு, நிலக்கடலை ஆகிய பயிர்களுக்கு மேலிருந்து அரை அடி ஆழத்திலும், பருத்தி, கரும்பு,மிளகாய்,வாழை, மரவள்ளி பயிர்களுக்கு மேலிருந்து முக்கால் அடி ஆழத்திலும் தென்னைக்கும் மா போன்ற பழப் பயிர்களுக்கும் 30.60, 90 செ.மீ. ஆழங்களில் தனித்தனியாக மூன்று மாதிரிகள் எடுக்க வேண்டும். ஒரு மண் மாதிரிக்கு ரூ.20 மட்டும் செலுத்தினால் போதுமானது. மண் மாதிரியினை சேகரித்து அருகிலுள்ள வேளாண் விரிவாக்க மையங்களிலோ குடுமியான்மலை மண் மாதிரி ஆய்வகத்தில் நேரடியாகவோ கொடுத்து மண் பரிசோதனை செய்து கொள்ளலாம்.மேலும் விபரங்களுக்குத் தங்கள் பகுதி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தைத் தொடர்புகொண்டு பயன்பெறலாம் என அதில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**மழையை பயன்படுத்திகோடை உழவு செய்தால் அதிக மகசூல் பெறலாம்**

அரியலூர், : கோடை மழையை பயன்படுத்தி, நிலத்தில் உழவோட்டும் பணி மேற்கொள்வதன் மூலம் விவசாயிகள் அதிக மகசூல் பெறமுடியும் என வேளாண் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அரியலூர் மாவட்டத்தில் தா.பழூர் மற்றும் திருமானூர் ஆகிய பகுதிகளில் 55 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கடந்த புரட்டாசி மாதத்தில் சம்பா நெல் பயிரிட்டு அறுவடை பணியை முடித்து விட்டனர். இதைத்தொடர்ந்து ஒரு சில பகுதிகளில் தற்போது நவரை நெல் சாகுபடி பயிரிட்டு நாற்றாங்கால் பணியை முடுக்கியுள்ளனர். மேலும் தோட்டக்கலை பயிர்களான பருத்தி, எள், சூரியகாந்தி, செடி முருங்கை போன்றவையும் பயிரிட்டு வருகின்றனர். இந்நிலையில் அறுவடை பணியை முடித்துள்ள நெல் மற்றும் நிலக்கடலை பயிரிட்ட நிலங்கள் தற்போது காய்ந்து வருகிறது. அடுத்தக்கட்டமாக தற்போது விவசாயிகள் உளுந்து மற்றும் வைகாசி முன்பட்ட நிலக்கடலை பயிரிட ஆயத்தமாக உள்ளனர். இந்த தருணங்களில் கோடை மழையை பயன்படுத்தி, நிலத்தில் உழவு பணி மேற்கொள்வதன் மூலம் விவசாயிகள் அதிக மகசூல் பெற முடியும் என மாவட்ட வேளாண் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தா.பழூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் பழனிசாமி தெரிவித்ததாவது: “சித்திரை மாதத்தில் கோடை உழவு செய்தால் பத்திரை மாற்றுத் தங்கம்” என்று சொல்வார்கள். அதன்படி. தற்போது கடந்த சில தினங்களாக கோடை மழை பெய்து வருவது மிகவும் பயனுள்ளதாகும். அறுவடை பணி முடித்து பின்னர் கோடைக்காலங்களில் தரிசு நிலங்கள் காய்ந்து இருக்கும். அந்த தருணங்களில் கோடை மழை பெய்கிறபோது கண்டிப்பாக உழவு பணி செய்வது மிகவும் உத்தமம். விவசாயிகள்

எருதுகளின் உதவியோடு கலப்பையை கொண்டும், இயந்திர கலப்பையை கொண்டும் உழவுப்பணியை மேற்கொள்ளலாம். கோடை உழவினால் முக்கியமாக மண்வளம் மேம்படும். மேலும் மண்ணிலுள்ள கூண்டுப்புழு, கொக்கிப்புழு, புருட்டினாயா புழு, சிகப்பு கம்பளிப்புழு உள்ளிட்ட பல்வேறு பூச்சிகள் மண்ணில் புதைந்து இருக்கும். இதனால் பயிர் செய்யும் காலங்களில் இந்த பூச்சிகள் மண்ணில் இனப்பெருக்கம் செய்து பயிர்களை சேதப்படுத்தி விவசாயிகளுக்கு மகசூல் இழப்பை உண்டாக்கும். இதை தடுக்கும் விதமாக நிலங்களில் உழவோட்டும்போது மண்ணிலுள்ள புழுக்கள் எல்லாம் மேலே வெளியில் வரும். அப்போது கோடை வெப்பத்தில் புழுக்கள் அனைத்தும் மயங்கிய நிலையில் இருக்கும்போது பறவைகள் எல்லாம் அதை கொத்தி தின்னும். மேலும் வெப்ப நிலை ஒரே சீராகவும், மண்ணிலுள்ள நீர்ப்பிடிப்புத்திறன் அதிமாகி நுண்ணியிர்களின் செயல்பாடு அதிகமாகும். மண் சத்தானது வேருக்குள் நிலைத்து நிற்கும். எனவே கோடை உழவை விவசாயிகள் மேற்கொள்வதன் மூலம் விவசாயிகள் அதிக மகசூல் பெற முடியும் என்றார்.

**தக்காளி சாகுபடி செய்து கூடுதல் லாபம் ஈட்டும் விவசாயி**

பெரம்பலூர், : பெரம்பலூர் அருகே, குறைந்த செலவில் நவீன முறையில் தக்காளி சாகுபடி செய்து அதிகளவில் விவசாயி ஒருவர் லாபம் ஈட்டி வருகிறார். பெரம்பலூர் அருகே உள்ள எசனை கிராமத்தை சேர்ந்தவர் விவசாயி வெங்கடேசன்(36). பட்டதாரியான இவர் பணப் பயிரான வெங்காயம் உள்ளிட்ட பல பயிர்களை சாகுபடி செய்து வருகிறார். இந்நிலையில் நாம் அன்றாட சமையலில் முக்கிய பங்கு வகிக்கும் தக்காளியில் ரெட் ரூபி என்ற ரக தக்காளியை நவீன முறையில் அவரது

வயலில் 20 சென்ட் நிலத்தில் சாகுபடி செய்துள்ளார். இது குறித்து விவசாயி வெங்கடேசன் தெரிவித்தாவது: வழக்காமான முறையில் தக்காளி செடியை தரையில் படர விடுவதால், தக்காளி காய்கள் காய்க்கும் சமயத்தில் தண்ணீர் பாய்ச்சுவதாலோ, அல்லது தரையில் காய்கள் விழும்போது, அதிகளவு வீணாகி விளைச்சலின் அளவை குறைக்கும். வழக்கமான விவசாயம் செய்யும் செலவைவிட சற்று கூடுதலாக செலவுசெய்து, கொடிகள் அமைத்து தற்போது பயிரிட்டுள்ளதை போன்று செய்தால், விளைச்சல் அதிகமாவதுடன், பிரஷ் ஆகவே தக்காளிகளை அதிகளவு வயிலில் இருந்து பறிக்க முடியும். மேலும், அதிக செடிகளை நடும் அளவிற்கு இடப்பரப்பு முழுமையாக பயன்படுத்தப்படுகிறது. இதனால் கிடைக்கும் கூடுதல் மகசூலுக்கு விலையும் அதிகமாக கிடைக்கும். தரமும் கூட்டப்படுகிறது. பயிர் செய்யும் விவசாயிகளுக்கு கூடுதல் லாபமும் கிடைக்கும். 20 சென்ட் நிலத்தில் தக்காளியை பயிரிட எனக்கு ரூ. 20,000 செலவானது. இதில் சுமார் 8 டன் மகசூல் கிடைக்க வேண்டும். டன் ஒன்றிற்கு ரூ. 6,000 வீதம், ரூ. 48,000 கிடைக்க வேண்டும். செலவு போக ரூ. 28,000 கிடைக்கும். இதுவே பராமரிப்பு அதிகமானால் இன்னும் சற்று கூடுதலாக லாபம் கிடைக்கும். இது நான் வயலிலேயே நேரடியாக வியாபாரிகளுக்கு விற்றுவிடுவதால் கிடைக்கும் தொகையாகும். இதனை, சந்தையிலோ அல்லது நேரடியாக பொதுமக்களிடம் விற்றால் இரண்டு மடங்கு லாபாம் கிடைக்கும். அதாவது 20 சென்ட் நிலத்தில் விவசாயி முறையான பயிர் பராமரிப்பு, நீர் பாய்ச்சுதல், பறவைகள், அணில்கள், எலிகளிடம் இருந்து பாதுகாப்பு செய்தால் இன்னும் கூடுதலான நல்ல மகசூல் கிடைக்கும். ரூ. 50,000 முதல் ரூ. 60,000 வரை குறைந்த செலவில் கூடுதல் லாபம் ஈட்டலாம் என தெரிவித்தார்.

**விவசாயிகள் பாதுகாப்பு சங்க செயற்குழு கூட்டம்**

வேதாரண்யம், : நாகை, திருவாரூர் மா வட்ட குடிக்காணி மற்றும் குத்தகை சாகுபடிதாரர்கள் விவசாய பாதுகாப்பு சங்க செயற்குழு கூட்டம் சங்கத் தலைவர் பாஸ்கரன் தலைமையில் நடந்தது. பொருளாளர் அருள்ஜோதி, தொழில் உரிமையாளர் உரிமையாளர் அம்பிகாதாஸ், சுப்பிரமணியன், சதாசிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயலாளர் கலிதீர்த்தான் வரவேற்றார். சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து குப்புசாமி, முருகையன், வீரமணி, தமிழ்மணி, நடராஜன், புயல்குமார் உட்பட பலர் பேசினர். மேலும் குடிக்காணி குத்தகை நிலங்களில் குடியிருப்போர் கட்டிய வீடுகளுக்கு மின் இணைப்பு பெற தடையாக இருக்கும் வேதாரண்யம் கோவில் நிர்வாகத்தை கண்டிப்பது, அதற்கு உடைந்தையாக உள்ள மின்சார வாரிய அதிகாரிகளின் போக்கை கண்டிப்பது, வேதாரண்யத்தின் ஜீவாதார தொழிலான உப்புத் தொழில் செழிப்படைய திருத்துறைப்பூண்டிஅகஸ்தியன்பள்ளி அகல ரயில்பாதை திட்டத்தை மத்திய அரசு விரைவுபடுத்த வேண்டும் உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வேதரத்னம் நன்றி கூறினார்.

**பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

ஈரோடு, : பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான கேரளாவிலும், நீலகிரியிலும் கனமழை பெய்து வருவதால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு 1524 கனஅடி வீதம்

நீர்வரத்துள்ளது. அணையில் இருந்து ஆற்றின் வழியே குடிநீர் தேவைக்காகவும், காலிங்கராயன் பாசனத்துக்காகவும் 200 கனஅடியும், கீழ்பவானி வாய்க்காலில் 1200 கனஅடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தற்போது கீழ்பவானி வாய்க்காலில் இறுதி சுற்றுக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில் இன்னும் 2 நாட்கள் மட்டுமே கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படும். வரும் 30ம் தேதியுடன் நடப்பு கீழ்பவானி பாசன காலத்திற்கான நீர் திறப்பு நிறைவடைகிறது. இம்முறை தட்டுப்பாடின்றி எதிர்பார்த்த அளவிற்கு தண்ணீர் திறக்கப்பட்டதால் மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தற்போது அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்திருப்பதும் விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நேற்று காலை அணையின் நீர்மட்டம் 52.21 அடியாக இருந்தது. தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்துள்ளதால் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடும் நிலையிலும் நீர்மட்டம் 52 அடி என்ற அளவிலேயே கடந்த 4 நாட்களாக நீடித்து வருகிறது.

**மழையை பயன்படுத்தி கோடை உழவு செய்தால் அதிக மகசூல் பெறலாம்**

அரியலூர், : கோடை மழையை பயன்படுத்தி, நிலத்தில் உழவோட்டும் பணி மேற்கொள்வதன் மூலம் விவசாயிகள் அதிக மகசூல் பெறமுடியும் என வேளாண் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் தா.பழூர் மற்றும் திருமானூர் ஆகிய பகுதிகளில் 55 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கடந்த புரட்டாசி மாதத்தில் சம்பா நெல் பயிரிட்டு அறுவடை பணியை முடித்து விட்டனர். இதைத்தொடர்ந்து ஒரு சில பகுதிகளில் தற்போது நவரை நெல் சாகுபடி பயிரிட்டு நாற்றாங்கால் பணியை முடுக்கியுள்ளனர். மேலும் தோட்டக்கலை பயிர்களான பருத்தி,

எள், சூரியகாந்தி, செடி முருங்கை போன்றவையும் பயிரிட்டு வருகின்றனர். இந்நிலையில் அறுவடை பணியை முடித்துள்ள நெல் மற்றும் நிலக்கடலை பயிரிட்ட நிலங்கள் தற்போது காய்ந்து வருகிறது. அடுத்தக்கட்டமாக தற்போது விவசாயிகள் உளுந்து மற்றும் வைகாசி முன்பட்ட நிலக்கடலை பயிரிட ஆயத்தமாக உள்ளனர். இந்த தருணங்களில் கோடை மழையை பயன்படுத்தி, நிலத்தில் உழவு பணி மேற்கொள்வதன் மூலம் விவசாயிகள் அதிக மகசூல் பெற முடியும் என மாவட்ட வேளாண் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தா.பழூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் பழனிசாமி தெரிவித்ததாவது: "சித்திரை மாதத்தில் கோடை உழவு செய்தால் பத்திரை மாற்றுத் தங்கம்" என்று சொல்வார்கள். அதன்படி. தற்போது கடந்த சில தினங்களாக கோடை மழை பெய்து வருவது மிகவும் பயனுள்ளதாகும். அறுவடை பணி முடித்து பின்னர் கோடைக்காலங்களில் தரிசு நிலங்கள் காய்ந்து இருக்கும். அந்த தருணங்களில் கோடை மழை பெய்கிறபோது கண்டிப்பாக உழவு பணி செய்வது மிகவும் உத்தமம். விவசாயிகள் எருதுகளின் உதவியோடு கலப்பையை கொண்டும், இயந்திர கலப்பையை கொண்டும் உழவுப்பணியை மேற்கொள்ளலாம். கோடை உழவினால் முக்கியமாக மண்வளம் மேம்படும். மேலும் மண்ணிலுள்ள கூண்டுப்புழு, கொக்கிப்புழு, புருட்டினாயா புழு, சிகப்பு கம்பளிப்புழு உள்ளிட்ட பல்வேறு பூச்சிகள் மண்ணில் புதைந்து இருக்கும். இதனால் பயிர் செய்யும் காலங்களில் இந்த பூச்சிகள் மண்ணில் இனப்பெருக்கம் செய்து பயிர்களை சேதப்படுத்தி விவசாயிகளுக்கு மகசூல் இழப்பை உண்டாக்கும். இதை தடுக்கும் விதமாக நிலங்களில் உழவோட்டும்போது மண்ணிலுள்ள புழுக்கள் எல்லாம் மேலே வெளியில் வரும். அப்போது கோடை வெப்பத்தில் புழுக்கள் அனைத்தும் மயங்கிய

நிலையில் இருக்கும்போது பறவைகள் எல்லாம் அதை கொத்தி தின்னும். மேலும் வெப்ப நிலை ஒரே சீராகவும், மண்ணிலுள்ள நீர்ப்பிடிப்புத்திறன் அதிமாகி நுண்ணியிர்களின் செயல்பாடு அதிகமாகும். மண் சத்தானது வேருக்குள் நிலைத்து நிற்கும். எனவே கோடை உழவை விவசாயிகள் மேற்கொள்வதன் மூலம் விவசாயிகள் அதிக மகசூல் பெற முடியும் என்றார்.

**வாரசந்தையில் விறுவிறுப்பான விற்பனை**

நீடாமங்கலம், : நீடாமங்கலம் பேரூராட்சி 1வது வார்டில் தொடங்கப்பட்ட வாரச்சந்தையில் விறுவிறுப்பாக விற்பனை நடைபெறுகிறது. ஏராளமானோர் பொருட்களை வாங்கிச் செல்கின்றனர். திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் பேரூராட்சி பாப்பையன் தோப்பு 1வது வார்டு ரயில்வே லோபிரிட்ஜி அருகே கடந்த 19ம்தேதி வாரசந்தை தொடக்கவிழா நடந்தது. திறப்புவிழாவுக்கு மறுநாள் ஏராளமான கடைகள் வைக்கப்பட்டு காய்கறி உள்ளிட்ட வீட்டுக்கு தேவையான அனைத்து பொருள்களும் குறைந்த விலைக்கு பொதுமக்கள் வாங்கி சென்றனர்.நேற்றுமுன்தினம் ஞாயிற்று கிழமை காலைமுதல் மந்தமாக இருந்த சந்தை மதியம் முதல் விறுவிறுப்பாக விற்பனை தொடங்கியது. புளி, மிளகாய், மல்லி போன்றவை விலை குறைவாக இருந்ததால் மதியமே கடைகாரர்கள் 10 முதல் 20 கிலோ வரை விற்பனையானது. கடைகளை விட விலை குறைவாக இருப்பதாகவும், சில பொருட்கள் அதிக விலைக்கு விற்கப்பட்டதாக சந்தைக்கு வந்த பொதுமக்கள் தெரிவித்தனர். இருந்தாலும் மாலைநேரத்தில் காய்கறி உள்ளிட்ட வீட்டு உபயோக பொருள்கள் ஏராளமாக விற்பனை நடந்தது. மீன் கடைகளில் கொடுவா மீன், கருவாடு கிலோ ரூ.200க்கு விற்பனையானது

**தற்போது பெய்து வரும் கோடை மழையால் பாதித்த பருத்தியை**

திருவிடைமருதூர், : தஞ்சை மாவட்டத்தில் கோடை மழையால் பாதிக்கப்பட்டுள்ள பருத்தி பயிர்களை பாதுகாக்கும் வழிமுறை குறித்து

விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. திருவிடைமருதூர் அடுத்த ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலையம் சேர்ந்து வெளியிட்டுள்ள அறிக்கை: காவிரி டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் பணப்பயிரான பருத்தியை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். இந்த பருத்தி பயிர் 75 நாட்களை கடந்து பூ பூத்து காய்கள் உருவாகும் தருவாயில் உள்ளன. இந்த சூழ்நிலையில் தற்போது விடாமல் பெய்து வரும் கோடை மழையால் அதிக பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றன. இந்த பாதிப்பை தவிர்க்க பயிர் செய்யப்பட்ட நிலங்களில் அதிகப்படியாக உள்ள நீரை வடிகால் வசதியை ஏற்படுத்தி வடியவிட வேண்டும். நீண்ட நாட்கள் நீர் தேங்கியுள்ள நிலையில் பருத்தி வேரின் செயல்பாடு குறைந்து பருத்தி பயிருக்கு கிடைக்க வேண்டிய சத்துக்கள் கிடைக்காத நிலை ஏற்படும். இதை தவிர்க்க நீரை வடித்த பிறகு வயலை உலர விட்டு அதன்பின் 19.19.19 அல்லது 20.20.20 போன்ற நீரில் உடன் கரையக்கூடிய ஏதனும் ஒரு உர கரைசலை தெளிக்க வேண்டும். இதனுடன் நுண்ணூட்ட உரங்களை துத்தநாக சல்பேட் (0.5 சதம்) மற்றும் மக்னீசியம் சல்பேட் கலந்து தெளிக்க வேண்டும். தேவைக்கேற்ப 15 நாள் இடைவெளியில் பொட்டாசியம் நைட்ரேட் 1 சதவீத கரைசலையும் தெளிக்கலாம். அதேபோல் இந்த பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்தி பயிர்கள் மழை ஈரம் காரணமாக மண் மூலம் பரவக்கூடிய நோய்களான வாடல்நோய், வேரழுகல் நோய் தாக்குதலுக்கு உள்ளாகும். இந்த நோய்கள் மண்வாழ் பூச்சிகளான பியுசேரியம் மற்றும் ரைசோக்டோனியா போன்றவற்றின் மூலம் ஏற்படுகிறது. இந்த நோய் காரணிகள் பருத்தியின் வேர் பகுதிகளை தாக்கி அழிப்பதால் செடிகள் காய்ந்து விடுகிறது. இதை கட்டுப்படுத்த முதலில் நோய் தாக்கப்பட்ட

செடிகளை பிடிங்கி அழிக்க வேண்டும். பின்னர் பாதிக்கப்பட்ட இடத்திலும் அதனை சுற்றியுள்ள செடிகளின் வேர் பகுதியை நனையுமாறு பூசன கொல்லி கரைசலை மண்ணில் ஊற்ற வேண்டும்.